செ.வெ.எண்: நாள்:26.09.2021

# நாமக்கல் மாவட்டம்
## மோகனூர் வட்டாரத்தில் நடைபெற்ற கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாம்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி. சிங் இ.ஆ.ப அவர்கள் நேரில் பார்வையிட்டார்.

-----

நாமக்கல் மாவட்டத்தில் கடந்த 12.09.2021 மற்றும் 19.09.2021 - ல் ஆகிய நாட்களில் மாபெரும் தடுப்பூசி முகாம்கள் நடைபெற்றதில் 85,325 மற்றும் 31,448 பேர் தடுப்பூசி செலுத்தி பயன்பெற்றனர். 3-ம் கட்டமாக இன்று (26.09.2021) அனைத்து ஊராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகள் ஆகிய பகுதிகளில் உள்ள அரசு மருத்துவமனைகள் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், ஊட்டச்சத்து மையங்கள், தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் உள்ள 476 நிலையான முகாம்கள் மூலமாகவும் 24 நடமாடும் குழுக்கள் மூலமாகம் மொத்தம் 500 இடங்களில் கொரோனா நோய் தடுப்பூசி சிறப்பு முகாம்கள் நடைபெற்றன.

இந்தமுகாம்களில் 210 மருத்துவர்கள், 430 செவிலியர்கள், 1600 அங்கன்வாடி பணியாளர்கள், 1400 ஆசிரியர்கள், 415 பயிற்சி செவிலியர்கள் மற்றும் 265 பயிற்சி சுகாதார ஆய்வாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

நாமக்கல் மாவட்டத்தில் தொழில் வளம் மேம்படவும், கொல்லிமலையில் சுற்றுலா மேம்படவும், அனைவரும் தவறாது தடுப்பூசி போட்டுக்கொள்ள மாணவர்கள், ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், பணியாளர்கள், தொழிலாளர்கள், தொழில் முனைவோர், விவசாயிகள், காய்கறி வியாபாரம் செய்பவர்கள், வர்த்தக நிறுவனங்களை சார்ந்தவர்கள் அனைவரும் விழிப்புணர்வு ஏற்படுத்தி, தங்கள் நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் தடுப்பூசி போட்டுகொள்வதை உறுதி செய்ய மாவட்ட நிர்வாகத்தின் மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டு சமூக வலைதளங்கள், பத்திரிக்கைகள், தொலைக்காட்சிகள் மூலமாக தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பொதுமக்கள் விழிப்புணர்வுடன் மாவட்டம் முழுவதும் அனைத்து முகாம்களிலும் காலை முதலே ஆர்வத்துடன் வருகை தந்து தேவைக்கேற்ப முதல்தவணை அல்லது இரண்டாம்தவணை தடுப்பூசி போட்டுக்கொண்டனர். தடுப்பூசி போட்டுக்கொண்டவர்கள் அந்தந்த மையங்களிலேயே அரைமணி நேரம் மருத்துவ குழுவினரின் கண்காணிப்பில் வைக்கப்பட்டு வீட்டிற்கு அனுப்பப்பட்டனர்.

தடுப்பூசி போடும் பணிகளை கண்காணிக்க துணை ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள், மருத்துவ அலுவலர்கள் நியமிக்கப்பட்டு தேவைக்கேற்ப முகாம்களுக்கு உடனுக்குடன் தடுப்பூசிகள் கொண்டு செல்லும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மோகனூர் வட்டாரத்தில் அணியாபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி, சுப்பிரமணியபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, மோகனூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்ற கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாம்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி. சிங் இ.ஆ.ப அவர்கள் இன்று (26.09.2021) நேரில் பார்வையிட்டார். தொடர்ந்து மோகனூர் வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் குழந்தைகள் சிகிச்சை பிரிவு, மருந்துகள் வழங்கும்

பிரிவு, அறுவை சிகிச்சை அரங்கம், புறநோயாளிகள் பிரிவு உள்ளிட்ட மருத்துவ சிகிச்சை வசதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டார்.

இந்த நிகழ்வுகளில் மோகனூர் வட்டார மருத்துவ அலுவலர் மரு.ச.கலைச்செல்வி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சி.சீனிவாசன், மாவட்ட தாய் சேய் நல அலுவலர் திருமதி.தனலெட்சுமி உள்பட மருத்துவர்கள், செவிலியர்கள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.